REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✱ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மார்கழி 21உ வியாழன் (5—1—56) ★ ★ வெளியூர்: மார்கழி 22உ வெள்ளி (6—1—56) [இதழ் 175

இரண்டு இலட்சம் டன் கோதுமை இந்தியா இறக்குமதி செய்யும்

இந்த 1956-ம் ஆண்டில் இந்தியப் பேரரசு இரண்டு இலட்சம் டன் கோதுமையை இறக்குமதி செய்ய முடிவு செய்திருக்கிறதாம்.

இதில் ஒரு பகுதி அமெரிக்க உதவித் திட்டத்தின்கீழ் இறக்குமதியாகும் என்றும், எஞ்சியவை ஆஸ்திரேலியாவில் ரொக்கமாகவே வாங்கப்படும் என்றும் தெரியவருகிறது.

1955-ம் ஆண்டில் 4.35 இலட்சம் டன் கோதுமையும், 2.65 இலட்சம் டன் அரிசியும் இந்தியா இறக்குமதி செய்தது.

கைவண்டித் தொழிலாளருக்குக் கைவிரிப்பு!

துறைமுக துரைத்தனத்தின் பிடிவாதம்

'நேரடி நடவடிக்கை'க் கைவிடப்பட்டதாம்!

மத்திய அரசாங்கத்திற்கு மனுச் செய்யப்போகிறார்களாம்!

சென்னை ஜன 5—

சென்னைத் துறைமுகத்திற்குள் மக்களால் இழுத்துச் செல்லப்படும் கைவண்டிகளை அனுமதிக்கத் துறைமுகத் துரைத்தனம் மறுத்துவிட்டது; அதன் விளைவாக வேலை இழந்து தவிக்கும் ஆயிரம் தொழிலாளர்கள்வரை முதல் தேதி முதல் சென்ற நான்கு நாட்களாக மறியலில் ஈடுபட்டிருந்தனர்.

அம்மறியலின் விளைவாக, கப்பல்களிலிருந்து இறக்குமதியான பொருட்களும், ஏற்றுமதி செய்யப்பட வேண்டிய பொருட்களும் கப்பல்களில் ஏற்ற முடியாமலும், இறங்கிய பொருட்களை சம்பந்தப்பட்டவர்களிடம் சேர்ப்பிக்க முடியாமலும் துறைமுகத்திலேயே குவிந்து கிடக்க வேண்டியதாயிற்று.

கைவண்டித் தொழிலாளர்களின் அமைதியான நேரடி நடவடிக்கையின் காரணமாக, மூட்டைகளைச் சுமக்கும் மாட்டுவண்டிகளும் பணிபுரிய முடியாமல் தேங்கிவிட்டன. ஒன்றிரண்டு லாரிகளே மூட்டைகளை ஏற்றிவரவும், செல்லவும் பணியாற்றின.

வண்டிகளில் மூட்டைகளை ஏற்றும் தொழிலாளர்களும், கைவண்டிக்காரர்களுக்கு அனுதாபம் காட்டும் கருத்துடனோ அல்லது அச்சத்தின் காரணமாகவோ மூட்டைகளை வண்டியில் ஏற்ற மறுத்துவிட்டனர்.

சென்னை நகர ஏற்றுமதி—இறக்குமதி வியாபாரிகளும், பாதிக்கப்பட்ட கைவண்டித் தொழிலாளர்களை வழக்கம்போல் துறைமுகத்திற்குள் அனுமதிக்க வேண்டும் என, துறைமுகத் துரைத்தனத்தை வேண்டிக்கொண்டுள்ளனர்; அதற்கான ஒரு விரிவான வேண்டுகோள் அறிக்கையையும் வியாபாரிகள் அதிகாரிகளிடம் கொடுத்துள்ளனர்.

கைவண்டித் தொழிலாளர்களின் நான்கு நாள் மறியலும் அமைதியாகவே நடைபெற்று இருக்கிறது; கலவரம் நேருமோ என்று அஞ்சத்தக்க சூழ்நிலை எந்தவகையிலும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

அமைதியான நேரடி நடவடிக்கையை, வெற்றி ஏற்படும் வரையில் தொடர்ந்து நடத்துவதற்குத் தொழிலாளர்கள் துணிந்தே இருந்தனர்; பலாத்காரத்திற்குத் துளியும் இடமின்றி நான்கு நாட்களாக மறியலை அமைதியாகத் தொழிலாளர்கள் நடத்தியிருக்கின்றனர்; வியாபாரிகளின் ஒருமித்த ஆதரவும் கைவண்டித் தொழிலாளர்களுக்குக் கிடைத்திருக்கிறது.

துறைமுகத்திலும் அகற்றப்படுவாரற்ற பொருட்கள் அம்பாரம் அம்பாரமாகக் குவிந்துவிட்டன. துறைமுகத் துரைத்தனம், தனக்கு விருப்பமில்லாத நிலையிலேயே, கைவண்டித் தொழிலாளர்களின் கோரிக்கைக்குப் பணிய வேண்டிய நெருக்கடி விநாடிக்கு விநாடி வளர்ந்துகொண்டும் வந்திருக்கிறது.

கைவண்டித் தொழிலாளர்களை நாடி வெற்றி வேகமாக விரைந்துகொண்டிருக்கும் நிலையில், நேரடி நடவடிக்கையைக் கைவிடுமாறு, தொழிலாளர்கள் தூண்டப்பட்டு இருக்கிறார்கள்.

துன்பம் தொலைக்கப்பட்டு, துயர் துடைக்கப்பட்டு, இழந்த வாழ்வை மீண்டும் தொழிலாளர்கள், தங்கள் நெஞ்சுரத்தால் அடையும் கட்டம் நெருங்கிக்கொண்டிருக்கும் தருவாயில், மறியல் அறப்போரை நிறுத்தி, மத்திய அரசாங்கத்திற்கு மண்டியிட்டு மனுப் போடும் போதனை தரப்பட்டு இருக்கிறது.

ஆயிரம் தொழிலாளர்கள் அவதிப்படுவதைக் கண்டும், தங்கள் குடும்பத்துடன் அவர்கள் பட்டினி கிடப்பதைப் பார்த்திருந்தும், அவர்கள் கண்ணீரைத் துடைத்து மறுபடியும் வாழ்வளிக்க மனமொப்பாது துறைமுக துரைத்தனம் இருப்பதை அனுபவ வாயிலாக அறிந்த பின்னரும், எங்கோ இருக்கிற மத்திய அரசாங்கம், கைவண்டித் தொழிலாளர்களுக்கு நீதி வழங்க முன்வரும் என எண்ணியது, ஏமாளித்தனமேயாகும்.

கைவண்டித் தொழிலாளர்களுக்கு இனி மிச்சமாக இருப்பது ஒன்றே ஒன்றுதான்; தங்கள் பரிவாரங்களுடன், அவரவர்கள் பிறந்த ஊர்களுக்குத் திரும்ப வேண்டிய வழிதான், தொழிலாளர்களுக்கு இனி இருக்கிறது.

துறைமுகக் கைவண்டித் தொழிலாளர்களை, டில்லியை நோக்கி இறைஞ்ச வழிகாட்டிய நல்லவர்கள் வாழி!

தொழிலாளர்களுக்கு டில்லியைக் காட்டி பிரச்சினையை ஒரேயடியாக இல்லாமல் செய்துவிட்டவர்களை, துறைமுக துரைத்தனம் பாராட்டும்—பரவசம் காட்டும்!

இத்தகு போற்றல் தனக்கில்லையே என வருந்தக்கூட வருந்தும், துரைத்தனம்!

கைவண்டிக்காரர்களுக்கு வாடகைக்கு விட்டுவந்த கைவண்டி உரிமையாளர்கள், இனி அந்த வண்டிகளை எரிபொருளாக அடுப்பில் வைத்து எரிக்க வேண்டியதுதான்!

67 தொழிலாளர் உள்ளிருப்பு வேலை நிறுத்தம்!

சென்னை, ஜன. 5—

விடுமுறை நாட்களை அதிகரிக்கவும், சம்பளம், கிராக்கிப் படி உயர்வு, போனஸ் முதலிய கோரிக்கைகளுக்காகச் சென்னை மவுண்ட்ரோடில் உள்ள 'உம்மிடியார் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்' உற்பத்தித் தொழிற்சாலையைச் சேர்ந்த 67 தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்திருக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

பாங்கி ஊழியர்களுக்கு எதிராக சென்னையில் தடை உத்தரவு

பேச்சுவார்த்தைகளுக்கு இணங்க பாங்கி முதலாளிகள் மறுப்பு

சர்க்கார் ஆதரவு தந்ததே காரணம் எனக் குற்றச்சாட்டு

சென்னை, ஜன. 5—

பாங்கி ஊழியர்கள் வரும் 7-ந் தேதி முதல் இந்தியாவெங்கணும் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்திருப்பதையொட்டி, சென்னை நகரில் ஊர்வலங்கள், கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் முதலியன நடத்தக்கூடாதென நகர போலீஸ் சட்டத்தின் கீழ் தடையுத்தரவு ஒன்றை போலீஸ் கமிஷனர் பிறப்பித்திருக்கிறார்.

இந்த உத்தரவு இன்று முதல் 25-ந் தேதிவரை அமுலிலிருக்குமாம்.

முதலாளிகள் மறுப்பு

ஏற்பட்டுள்ள தகராறைப் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துக்கொள்ளுவதற்குத் தாங்கள் தயாராக இல்லை என்று பாங்கி முதலாளிகள் அறிவித்துவிட்டதாக அகில இந்திய பாங்கி ஊழியர் சங்க பொதுச் செயலாளர் பிரபாத்கர் அறிவித்திருக்கிறார்.

இந்தத் தகவலை அறிவித்து பிரதமர் நேருவுக்கு அவர் எழுதியுள்ள கடிதம் ஒன்றில், சில நாட்களுக்கு முன்பு பாங்கி நிர்வாகிகள், இத்தகு பேச்சுவார்த்தைகளுக்குத் தயாராக இருந்ததாயும், ஆனால், பாங்கி ஊழியர்களுக்கு எதிராகவும், முதலாளிகளுக்கு ஆதரவாகவும் சர்க்கார் கருத்தறிவித்துவிட்டமையினால், இப்போது பேச்சுவார்த்தைகளுக்கு இணங்க முடியாதென அடம் பிடிப்பதாயும் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியாவில் சுமார் 32,000 நூல் நிலையங்கள் தற்போது உள்ளன; அவற்றில் மொத்தம் சுமார் 71 இலட்சம் புத்தகங்கள் இருக்கின்றன.

கல்கத்தா 'டிராம்வே' தொழிலாளர் அடையாள வேலை நிறுத்தம்

நகர போக்குவரத்து நிலை நின்றது

48 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனராம்

கல்கத்தா, ஜன. 4—

கல்கத்தா டிராம்வே கம்பெனியைச் சேர்ந்த தொழிலாளர்கள் 10,000 பேரில் பெரும்பான்மையினர் இன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்.

தினந்தோறும் சுமார் 12 இலட்சம் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் 420 டிராம்களும் ஓடமுடியாது போய்விட்டது.

நீண்ட நாட்களாக, தொழிலாளர்களின் கோரிக்கைகளை பிரிட்டிஷ் முதலாளிகள் ஏற்றுக்கொள்ளாது காலந் தாழ்த்தி வருவதை எதிர்த்துத்தான், இந்த அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த வேலை நிறுத்தத்தை டிராம்வே தொழிலாளர்களுக்கான சோஷலிஸ்டு, கம்யூனிஸ்டு தொழிற் சங்கங்கள் கூட்டாக ஏற்பாடு செய்தன.

காங்கிரஸ் தொழிற் சங்கத்தவர், 'இந்த வேலை நிறுத்தம் சட்ட விரோதமானது' என்று கூறி, ஈடுபடாது இருந்துவிட்டனர்.

சர்க்கார் போக்குவரத்து இலாகா சுமார் 40 வண்டிகளை அதிகமாக ஈடுபடுத்தினர்; என்றாலும், போக்குவரத்து மிகவும் கஷ்டமாகிப் போய் நிலைநின்று விட்டது என்று தெரிய வருகிறது.

மாலையில், வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் (டிரைவர்கள், கண்டக்டர்கள்) பொதுக் கூட்டம் ஒன்று கூட்டி, தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தினர்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபடாத தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்கள் தாக்கியதாகக் கூறி, 48 பேர்களைப் போலீசார் கைது செய்திருக்கின்றனராம்.

வெளிவராத எம். என். ராய் நூல்களை பிரசுரிக்க ஏற்பாடு

'தற்கால விஞ்ஞானத்தின் தத்துவ விளைவுகள்'

ஒன்பது தொகுதிகளாக வெளிவரும்

கல்கத்தா, ஜன. 4—

இயற்கை எய்திய எம். என். ராய் அவர்களின், இதுவரையில் வெளிவராத நூல்களைப் பிரசுரிப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

கார்ல் மார்க்ஸ் காலத்திற்குப் பின்னர் இன்றுவரை ஏற்பட்டுள்ள சிந்தனைப் போக்கை, எம். என். ராயின் நூல்கள் பிரதிபலிக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது.

இதற்காகப் பிரதமர் நேரு ரூ. 5,000 நன்கொடை தந்துள்ளார்.

தோழர் எம். என். ராய் நினைவு நிதிக்கு மேற்கு வங்க உணவு மந்திரி பி. சி. சென் ஏற்பாடு செய்துள்ளார்.

'தற்கால விஞ்ஞானத்தின் தத்துவ விளைவுகள்' என்ற எம். என். ராய் அவர்களின் நூல் 9-தொகுதிகளில் வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவருடைய சில நூல்கள் ரஷ்ய மொழியிலும், ஸ்பானிஷ் மொழியிலும், ஜெர்மன் மொழியிலும் இருக்கின்றன.

25,000 மணங்கு சணல் தீக்கிரையாயிற்று

ரூ. 6 இலட்சம் மதிப்புள்ளது

சாகிப்கஞ்ச், ஜன. 4—

'சக்ரி காளி கட்டம்' என்ற இடத்தில் சேமித்துவைக்கப்பட்டிருந்த சுமார் 6 இலட்சம் பெறுமானமுள்ள 25,000 மணங்கு சணல் தீக்கிரையாகிவிட்டதாம்.

கல்கத்தாவிற்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்காகச் சிறிய வர்த்தகர்களால் இந்தச் சணல் இங்குக் கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்ததாம்.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 5–1–'56 வியாழன்

ஆயிரம் பேர் அவதி!

1956-ம் ஆண்டு முதல் தேதியில் பல இலட்சக்கணக்கான மக்கள் புதிய மகிழ்ச்சியுடன் விளங்கி இருப்பர் என்பதில் சந்தேகமில்லை. வழக்கத்திற்கு மாருகப் புதிய தொல்லை எதுவும் பல கோடி மக்களுக்கு ஏற்பட்டு இருப்பதற்கும் நியாயமிருக்காது.

ஆனல் அந்த நாள், சென்னை துறைமுகத்தில் மூட்டை வண்டிகளை முட்டித் தள்ளியும், இழுத்தும் தங்கள் வாழ்க்கையை நடத்திவந்த ஏறத்தாழ ஆயிரம் தொழிலாளர்களின் வயிற்றில் மண்ணை வாரிப் போடும் வேதனை நாளாக முடிந்திருக்கிறது.

ஒன்றுக்கு இரண்டு மடங்கு மூன்று மடங்கு மூட்டைகளை ஏற்றி மார்பு வலிக்க இழுப்பதும், முதுகெலும்பு குழக முட்டித் தள்ளுவதும், கவர்ச்சிகரமானதும் இலகுவானதுமானத் தொழில் என எவரும் சொல்ல மாட்டார்கள். அத்தொழிலில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்களும், அத்தொழிலை மனமுவந்து செய்து வருகிருர்கள் எனவும் சொல்வதற்கில்லை. வாழ வேறு கதியற்ற நிலையிலேயே, நாற்கால் பிராணிகளால் மட்டுமே செய்யத்தக்க அத்தொழிலை, அத்தொழிலாளர்கள் மேற்கொண்டு இருக்கிருர்கள்.

எளிதானதும், வாழ்வளிக்கக் கூடியதுமான வேறு தொழில்களில் ஈடுபடும் வாய்ப்பு அத்தொழிலாளர்களுக்குக் கிட்டுமானல், அவர்கள் ஒரு விநாடி கூட பார வண்டியுடன் தினசரி போராடும் தொழிலை உடும்புபோல் பற்றிக்கொண்டு இருக்க மனம் ஒப்பார்.

தினசரி உயிர்வாழ்வதே அவர்களால் தாங்க முடியாத பெருஞ் சுமையாகப் போய் விட்டதினுல், மற்றவர்களால் கனவிலும் அஞ்சக்கூடிய பார வண்டிகளை இழுக்கும் தொழிலை, அவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டிய கட்டாயத்திற்கு, துளியும் விரும்பாத நிலையில் பணிய வேண்டியவர்களானுர்கள். எனவே, அவர்கள் தினசரி இழுத்துச் செல்லும் வண்டியின் பெருஞ் சுமை, தங்கள் வாழ்க்கைப் பளுவைக் காட்டிலும் பல மடங்குக் குறைந்திருப்பதாகவே அவர்களால் கருதப்படுவதாக இருக்கிறது. அதனுல் தான் அத்தொழிலை விட்டு விலக முடியாது, அதனையே கட்டி அழுதாக வேண்டிய அவல நிலையில் அத்தொழிலாளர்கள் இருந்து வருகிருர்கள்.

ஆண்டு ஒன்றுக்கு 250 வண்டிகள் விதம் குறைத்துக் கொண்டே வந்து 1956-ல் அறவே மக்கள் இழுக்கும் மூட்டை வண்டிகளைத் துறைமுகத்தில் நுழைய அனுமதிப்பதில்லை என 1953-லேயே துறைமுக துரைத்தனம் முடிவு கட்டி இருந்ததாம். அம்முடிவின்படி மூன்று ஆண்டுகளுக்குமுன் 750 வண்டிகளுக்கு அனுமதி தந்திருந்த துறைமுகத் துரைத்தனம், ஒவ்வொரு ஆண்டும் அநுமதி மறுத்துக் கொண்டே வந்து, எஞ்சிய 250 வண்டிகளுக்கும் இவ்வாண்டு முதல் தேதியிலிருந்து அநுமதி தர மறுத்துவிட்டதாம். எனவே, துறைமுகத் துரைத்தனத்தின் முடிவை ஏற்கனவே பாதிக்கப்பட்ட மூட்டை வண்டிகள் தொழிலாளர்கள் தெரிந்தே இருப்பதாகவும், அதனுல் துரைத்தனத்தின்மீது கோபிப்பதோ, குறைபடுவதோ தொழிலாளர்களுக்கு நியாயமாகாது எனவும் துரைத்தனம் சார்பில் அறநெறி பேசப்படுகிறது.

பாரமான வண்டிகளை மாடு போல் மனிதர்கள் இழுப்பது சட்டப்படி தடுக்கப்பட்டிருக்கவில்லை. நகரின் பல பகுதிகளிலும் பார வண்டிகளை மனிதர்கள் இழுத்துச் செல்வது நடைமுறையில் இருக்கத்தான் இருந்துவருகிறது.

பார வண்டிகளை மனிதர்கள் இனி இழுக்கக்கூடாது எனப் பொதுவான ஒரு சட்டத்தை அரசாங்கம் இயற்றிவிட்டால், அச்சட்டத்தை ஒரு நல்வாய்ப்பாகக் கொண்டு, மனிதர்களால் இழுத்துவரப்படும் பார வண்டிகளை துறைமுகத்திற்குள் நுழைபக்கூடாது எனத் தடைவிதிக்க, துறைமுக துரைத்தனம் முன்வருவதில் பொருளுமுண்டு —நியாயமும் இருக்கிறது. ஆனல், நடைமுறை விவகாரம் அப்படி இருக்கவில்லை.

'மூன்று ஆண்டுகளுக்குமுன்னரே முடிவுகட்டப்பட்ட ஒரு விஷயமாகும் இப்பார வண்டிகள் அனுமதி மறுப்பு' என்று தான் துறைமுக துரைத்தனம் கூறுகிறதேயல்லாது, அத்தகைய முடிவு எடுப்பதற்கான மூலகாரணம் என்ன என்ற விஷயத்தை விளக்காமலே மவுனமாக இருந்துவிட்டது, துரைத்தனம். அந்த மவுனத்தில் தான், துறைமுக துரைத்தனத்தின் ஓரவஞ்சனையான உள்ளெண்ணம் ஒளிந்து கொண்டு இருக்கிறது.

மனிதர்களால் இழுக்கப்படும் மூட்டை வண்டிகள், இழுக்கிறவர்களுக்குச் சொந்தமானதுமல்ல. அவ்வண்டிகளுக்கென, குறிப்பிட்ட வாடகையைக் கொடுத்தே, இழுப்பவர்கள், அவ்வண்டிகளை வாடகைக்குப் பெறுகிருர்கள்.

வாடகைக்கு வரும் கட்டை வண்டிக்காரர்களும், சாதாரண நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்களேயாவர். துறைமுக துரைத்தனத்தின் தடுப்பு முறையால் அவ்வண்டிக்குரிய நடுத்தர குடும்பத்தினரும் பாதிக்கப்படுகிருர்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இறக்குமதி ஏற்றுமதியாகும் மூட்டைகளைத் துறைமுகத்திலிருந்து வெளியேற்றவும், துறைமுகத்திற்குக் கொண்டுவரவும், சில குறிப்பிட்டவர்களுக்கு ஏற்கனவே பாத்தியதை வழங்கப்பட்டு இருக்கிறது. அத்தகு பாத்தியம் பெற்றிருப்பவர்களுக்கு மேலும் சலுகை காட்டும் நினைப்புடன்தான், மனிதர்களால் இழுக்கப்படும் பார வண்டிகளைத் துறைமுகத்தில் நுழையவிடாது, துறைமுக துரைத்தனம் தடுத்திருக்கிறது என நம்புகிருேம். இத்துறையில் ஏற்கனவே சலுகை பெற்றிருப்பவர்களுக்கு மேலும் சலுகை செய்வதற்காக, மூட்டை வண்டி தொழிலாளர்கள் வயிற்றில் மண்ணைவாரிப் போட துறைமுகத் துரைத்தனம் முன்வந்திருப்பது நியாயமற்றதும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கதுமாகும்.

ஏற்றுமதி இறக்குமதியின் பெயரால் குறிப்பிட்ட சிலர் மேலும் பணம் குவிப்பது நியாயமா? அல்லது ஆயிரம் தொழிலாளர்கள் பட்டினியால் துயருறுவது நியாயமா?-என்ற இரண்டில் ஒன்றைத் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் சென்னை அரசாங்கத்தைச் சார்ந்ததாகும்.

உடனடியாக, மூட்டைவண்டித் தொழிலாளர்கள் மீண்டும் வாழ்வு பெறுவதற்கான வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். காலந் தாழ்த்துவது நீதியுமல்ல —நேர்மையானதும் அல்ல.

மக்கள் இழுத்துச் செல்லும் மூட்டை வண்டிகளை வழக்கம் போல் துறைமுகத்திற்குள் அனுமதிக்கும்படி துறைமுகத் துரைத்தனத்தை இணங்கும்படி அரசாங்கம் செய்ய வேண்டும். அதைச் செய்து முடிக்கும் ஆற்றல் சென்னை அரசாங்கத்திற்கு இயல்பாகவே இல்லையானல், வேலையின்றி பட்டினி கிடக்கும் ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேறு வேலை கொடுக்கும் ஏற்பாட்டையாவது உடனடியாகச் செய்ய அரசாங்கம் முன்வரவேண்டும்.

சிறைச்சாலையில் தயாராகும் மரச் சாமான்கள்

சென்னை சர்க்கார் உத்தரவு

சென்னை, ஜன. 4—

மாநிலம் முழுவதும் சர்க்கார் இலாகாக்களுக்குத் தேவையான மேஜை, நாற்காலி முதலிய எல்லாச் சாமான்களையும் கூடியவரையில் சிறைச்சாலைகளில் தயாரிப்பவைகளையே உபயோகித்துக் கொள்ளவேண்டுமென சென்னை சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர்.

'தர'மான சாமான்களைப் போதிய அளவுக்குத் தயாரித்து வைக்கும்படி சிறை சூப்பிரண்டெண்டுகளுக்கும் சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர்.

சிறை இலாகாவுக்கு வெளியிலிருந்து அதுபோன்ற சாமான்களை வாங்குவதாக இருந்தாலும், இனி சர்க்காரின் மூன் அனுமதி தேவையாகும்.

டில்லிக்கு வருவார்?

நியூயார்க், ஜன 3—

அமெரிக்க அரசாங்க அமைச்சர் டல்லஸ், இந்தியாவின் தலைநகரான டில்லிக்குச் செல்வதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி அமெரிக்க சர்க்கார் பரிசீலனை செய்து வருவதாகக் கூறப்பட்டுள்ளது.

சிந்திரி இரசாயன உர உற்பத்திச்சாலையில் அம்மோனியம் சல்பேட் உற்பத்தி புதியதொரு உச்சத்தை எட்டியிருக்கிறது. இவ்வருட உற்பத்தியின் இலட்சிய அளவு 3,20,000 டன்னுகக் கொள்ளப்பட்டிருந்தபோதிலும், 1955 டிசம்பர் 27-ந் தேதி நள்ளிரவு வரை மொத்தம் 3,20,262 டன் அம்மோனியம் சல்பேட் உற்பத்தியாகியிருக்கிறது.

குடியானவர் உரிமை

திட்டக் குழு சிபாரிசு

புதுடில்லி, ஜன. 4—

நிறைமையான சாகுபடி சம்பந்தமாக விவசாயிகளுக்கு சில பொறுப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்று திட்டக் குழு சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகிறது.

நிறைமையான உற்பத்திக்கு நியாயமான 'தரங்களை' நிர்ணயம் செய்து, அந்தத் 'தரங்களைப்' பின்பற்றும்படி எல்லா விவசாயிகளையும் கோரவேண்டும்; அவர்கள் பூசாரத்தைக் காப்பாற்றி மேலும் வளமாக்க வேண்டும்; திறமையான சாகுபடிக்கும் நிர்வாகத்துக்கும் வழிசெய்து, சில நிர்வாகச் சட்டம் இயற்ற வேண்டுமென்று திட்டக் குழு சிபாரிசு செய்துள்ளது.

குடியானவர்களின் உரிமைகளையும் திட்டக் குழு வற்புறுத்தியிருப்பதாகத் தெரிகிறது.

'வாரம்' கொடுக்கத் தவறுதல் நிலத்தைப் பாழ்படுத்துவது ஆகிய குற்றச்சாட்டுகள் தவிர, வேறு எக்காரணத்தை முன்னிட்டும் குடியானவர்களை வெளியேற்றக்கூடாதென்று திட்டக் குழு வற்புறுத்தியுள்ளதாம்.

ரூ. 15 இலட்சம் செலவில் 5,000 வீடுகளாம்!

அரிசன மக்களுக்குப் புதிய குடியிருப்புத் திட்டமாம்!

சென்னை, ஜன 2—

அரிசன மக்கள் முன்னேற்றத் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டித்தரும் திட்டமொன்று வகுக்கப்பட்டிருக்கிறதாம்

ஆண்டொன்றுக்கு ரூ 15 இலட்சம் செலவில் 5,000 வீடுகள் கட்டித் தரப்படுமாம்.

ஆண்டு விழாவொன்றில் தலைமை தாங்கி இதை அறிவித்த அரிசன நல இலாகா டைரக்டர் ஜி. கே. மூத்திருளாண்டி அவர்கள் மேலும் பேசுகையில், பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அரிசன மக்களுக்காக இம்மாநிலத்தில் ரூ. 2 இலட்சம்தான் செலவிடப்பட்டதென்றும்; தற்போது கோடி ரூபாய் செலவிடப்பட்டிருப்பதாகவும்; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சுமார் 20 கோடி வரையில் செலவிடப்போவதாகவும் குறிப்பிட்டார்.

சென்னை மாநிலத்தில் சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள்

ரூ 425 இலட்சம் செலவிட முடிவு செய்யப்பட்டு முயற்சிக்கப்படுகிறது

சென்னை, ஜன 4—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இறுதியாக அனுமதிக்கப்பட்டால், சென்னை மாநிலத்தில் பல சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அமுல் நடத்தப்படுமாம்.

இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மொத்த உத்தேசமாக ரூ 425-இலட்சம் செலவாகுமாம்

மாநிலம் முழுமையிலுமுள்ள ஏரிகளிலிருந்து வண்டல் மண்ணைத் தோண்டி அவற்றை மராமத்து செய்யப்படுமாம்; 500 குழாய்க் கிணறுகள் தோண்டப்படுமாம்.

இந்தியாவுக்கு ரஷிய அறுவடை இயந்திரங்கள்

30 அறுவடை இயந்திரங்கள், ரஷ்யாவிலுள்ள நிறுவனமொன்றினுல் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ரஷ்ய தலைவர்கள் இந்தியாவுக்கு வந்திருந்தபோது அந்த இயந்திரங்களை இந்திய சர்க்காருக்குப் பரிசாகத் தந்தனராம்.

பின் தங்கிய வகுப்புகளைச் சேர்ந்த 32,016 மாணவர்களுக்கு 1955-ல் உபகாரச் சம்பளங்கள் வழங்கப்பட்டன அவற்றிற்காக வந்திருந்த விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை 58,381.

சிங்களவர்கள் கிளர்ச்சிக்கு எதிர்ப்பு!

தமிழர்கள் வேலை நிறுத்தம் மேற்கொள்ளுவர்?

சிங்கள மொழிக்குச் சமமாக தமிழுக்கும் அதற்குரிய நிலையை அளிப்பதற்கு சிங்களத் தலைவர்கள் மறுத்து வருவதை எதிர்த்து, இலங்கையில் உள்ள தமிழர்கள் அனைவரும் பிப. 20-ந் தேதியன்று வேலை நிறுத்தம் மேற்கொள்ள வேண்டுமென, அ. இ. தமிழர் பெடரல் கட்சி கேட்டுக்கொண்டுள்ளது.

சிங்களத் தலைவர்களின் சிங்கள மொழிக் கிளர்ச்சி, அரசியல் — பொருளாதாரம் — கலாச்சாரம் ஆகிய துறைகளில் தமிழர்களைச் சீரழித்துவிடுமென எச்சரித்து, எல்லாத் தமிழர்களும் பெடரல் கட்சியின்கீழ் ஒன்றுபட வேண்டுமென்று, கட்சியின் காரியக கமிட்டிக் கூட்டத் தீர்மானம் ஒன்று கேட்டுக் கொண்டுள்ளது.

தமிழர் பகுதிகளில் சிங்களவர் குடியேற்றம்

பொதுக்கூட்டமொன்றில், கட்சியின் தலைவர் செல்வநாயகம் அவர்கள் தீர்மானத்தைக் குறித்து விளக்குகையில், 'மொழிப் பிரச்சினை முன்னணியில் உள்ளபோதிலும், இலங்கைத் தமிழரின் அடிப்படை உரிமைகள்தான் முக்கியமான பிரச்சினை' என்றார்.

'எல்லா வகையிலும் இலங்கை சர்க்கார், தமிழரிடம் பாரபட்சம் காட்டி வருகிறது; தமிழர் பகுதிகளில் சிங்களவர்களைக் குடியேற்றி வருகிறது; இலங்கையில் பிறந்து வளராத தமிழர்களுக்கு வாக்குரிமை அளிக்க மறுக்கிறது' என்று அவர் குறிப்பிட்டார்.

முருகன் அருள் வேண்டும்'

இதற்கிடையில், சிங்கள மொழி வெறியர்கள், 'சிங்களத்தை மட்டுமே அரசாங்க மொழியாக்க முருகன் அருள வேண்டும்' என்று பிரார்த்திப்பதற்கு சிங்களவரின் சின்னமான சிங்கக் கொடியுடன் கதிர்காமத்துக்கு யாத்திரை சென்றுள்ளனர் என்று கூறப்படுகிறது.

பள்ளிகளுக்கு விவசாயப் பண்ணைகள்

நிலம் ஒதுக்கக் குழு நியமனம்

சென்னை, ஜன. 4—

ஆரம்பப் பள்ளிகள், ஆதாரப் பள்ளிகளுக்கு விவசாயப் பண்ணைகள் ஏற்படுத்துவதற்காக சர்க்காருக்கு நன்கொடை அளிக்கப்பட்டிருக்கும் நிலங்களை ஒதுக்குவது சம்பந்தமாகவும், மற்ற பிரச்சினைகள் பற்றியும் ஆலோசனை கூறுவதற்கு, முன்னுள் முதலமைச்சர் ஓமந்தூர் பி இராமசாமி தலைமையில், குழு ஒன்றை சர்க்கார் நியமித்துள்ளனர்.

குடிசைத் தொழிலுக்கு ரூ. 200 கோடியாம்

தனி அமைச்சர் இலாகா ஏற்படுத்தப்படுமாம்

புதுடில்லி, ஜன. 4—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிராம—சிறு கைத்தொழில்களுக்காக ரூ 200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

'இத்தொழில்களுக்காகத் தனி அமைச்சர் இலாகா ஏற்படுத்த வேண்டும்' என்று கார்வே குழு சிபாரிசு செய்துள்ளதை, திட்டக் குழுவினர் ஏற்றுக்கொண்டுவிட்டதாகத் தெரிகிறது.

இந்தியாவில் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் தொழில் 1954-ல புதியதொரு உச்சத்தை எட்டியிருக்கிறது 1953-ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பாலிசிகளின் எண்ணிக்கை சுமார் 1,44,000-மும், உறுதியளிக்கப்பட்ட தொகை ரூ 75,14,00,000-மும், பிரீமியம் வருமானம் ரூ 3,29,00,000-மும் அதிகரித்திருக்கின்றன.

வாடி வதங்கும் பயிர் செழிப்பதற்கு வைகை வழியாகத் தண்ணீர்

பெரியாறு மூலம் புத்துயிரூட்ட முயற்சி

மதுரை, ஜன 3—

புயலின் கொடுமையைச் சமாளித்து தறபொழுது எஞ்சி நிற்கும் பயிர்கள் தண்ணீரின்றி வாடி வதங்குவதைத் தவிர்ப்பதற்கும், விவசாயிகள் குறுகிய காலப் பயிர் அறுவடை செய்வதற்கும் இராமநாதபுரம் மாவட்டத்தில் புயலினால் உடைப்பு ஏற்பட்டு வற்றிப்போன பாசன ஏரிகளுக்கு பெரியாறு ஏரியிலிருந்து தண்ணீர் திருப்பி விடப்பட்டிருக்கிறதாம்

வைகை வழியாக இராமநாதபுரம் மாவட்டத்திற்குப் பெரியாறு தண்ணீர் விடப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

★

56,000 ஏழைகளுக்கு நிதி உதவினராம்!

குடிசைகள் கட்டிக்கொள்ளவாம்!

தஞ்சை, ஜன 2—

புயலால் பாதிக்கப்பட்ட வேதாரண்யம், பட்டுக்கோட்டை, அறந்தாங்கி மற்றுமுள்ள பகுதிகளில் 56,000 ஏழைகளுக்குக் குடிசைகள் கட்டிக்கொள்ளுவதற்கு ரூ. 13,35 000 சர்க்கார் இலவசமாகக் கொடுத்திருப்பதாகவும், 45 280 பேர்களுக்குத் துணிகள் விநியோகம் செய்திருப்பதாகவும 7 இலட்சம் மக்களுக்கு இலவசமாக உணவு இந்த வாரத்தில் அளித்ததாகவும் தஞ்சை மாவட்டக் கலெக்டர் கூறியுள்ளதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

★

எஸ். எஸ். ராஜேந்திரன் குழுவினர் காணிக்கை

ரூ. 1,000 தருகின்றனர்!

புயல் நிவாரண நிதிக்காக, 1—1—56 மாலை 6-30 மணியளவில், குடியாத்தம் ராஜா தியேட்டரில், தோழர் சி பி சிற்றரசு தலைமையில் எஸ். எஸ் இராசேந்திரன் குழுவினரின் 'அம்மையப்பன' நாடகம் நடைபெற்றது.

நாடகத்தின் இடைவேளையில் நடிகர்கள் எஸ் எஸ் இராசேந்திரன், டி. வி. நாராயணசாமி உண்டியல் மூலம் நிதி வசூலித்தனர்.

நாடக இறுதியில் தோழர் சி பி. சிற்றரசு அவர்கள் நடிகர்களைப் பாராட்டியும், புயலால் பாதிக்கப்பட்ட மக்களுடைய நிலைமை விளக்கியும், அவர்களுக்கு அளிக்க வேண்டிய உதவி பற்றியும், பழைமைக்கும் — புதுமைக்கும் உள்ள வேறுபாட்டை விளக்கியும் பேசினார்கள்

தோழர் சி பி. சிற்றரசு அவர்களுக்கு நாடக மன்றத்தின் சார்பில் எஸ் எஸ். இராசேந்திரன் கைத்தறி ஆடை போர்த்தினார் குடியாத்தம் நகர தி. மு. கழகச் சார்பிலும், மற்றும் படிப்பகம், வாசகசாலைகளின் சார்பிலும் கைத்தறி ஆடைகளும், மாலைகளும் அணிவிக்கப்பட்டன

நாடகத்தின் மூலம் வசூலான 1,000 ரூபாயையும், புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளிக்க தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் என் எஸ் கிருஷ்ணன் அவர்களிடம் கொடுத்துவிடுவதாக இராசேந்திரன் கூறினார்.

நிலக்கோட்டையில் நிவாரண நிதி வசூல்

எல்லாக் கட்சிகளின் சார்பிலும் அமைக்கப்பட்ட புயல் நிவாரணக் குழுவினர், ரூ 283 —9 —3 வசூல் செய்தனர்

பொறையார் தி. மு. கழக கிளைகள் வசூல்

பொறையார், எருக்கட்டாஞ்சேரி தி மு. கழகக் கிளைகள் சார்பில், கழகத் தோழர்கள் ரூ. 76—4—0-ம், சுமார் 2 கலம் அரிசியும், துணிகளும் வசூல் செய்தனர்

சலவைத் தொழிலாளர் அன்பளிப்பு

திருச்சி, புத்தூர்—வண்ணாரப்பேட்டை சலவைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கச் சார்பில், பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணத்திற்கென 28—12—55-ல் திருச்சி மாவட்ட கலெக்டருக்கு ரூ. 22—8—0 அனுப்பப்பட்டது

குமாரபாளையம் தி. மு. கழகத் தோழர்கள் வசூல்

இவ்வூர் கிளைக் கழகச் சார்பில், ஒன்பது தோழர்களிடம் ரூ 275-ம், மூன்று தோழர்களிடம் துணிகளும் திரட்டி, ரொக்கப் பணத்திற்கு 66 சேலைகள் வாங்கி மற்றத் துணிகளுடன் தஞ்சை மாவட்ட தி மு. கழகச் செயலாளருக்கு அனுப்பிவைத்தனர்.

முக்கூடல் தி. மு. கழகத் தோழர்கள் முயற்சி

முக்கூடல் தி. மு. கழகத் தோழர்கள், முக்கூடல், சடையப்பபுரம் மைலாப்புரம், அரியநாயகிபுரம் முதலிய ஊர்களில் வீடு வீடாகச் சென்று புயல் நிவாரண நிதிக்கு அரிசி, பணம், வசூலித்து, 448 படி அரிசியைச் சரிசமமாக மதுரை தோழர் எஸ் முத்து அவர்களுக்கும் வேதாரண்யம் தோழர் என் எஸ் இளங்கோ அவர்களுக்கும் அனுப்பிவைத்தனர்.

பணமாக வசூலான ரூ 251-ம் புயல் நிவாரண நிதிக்காகத் தி. மு கழகத் தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது

நிவாரண நிதி வசூல் செய்யும் பணியில் முக்கூடல் தி மு. கழகத் தோழர்கள் அனைவரும் முக்கிய பங்கேற்றனர்; அரியநாயகிபுரத்தில் ஊராண்மை கழகத் தலைவர் திரு வி. பிச்சாண்டி தேவர் அவர்கள் அயராது ஒத்துழைத்து கழகத் தோழர்களுக்கு ஊக்கமளித்தார்

தெரிந்து கொள்ளுங்கள்

"சென்னை மாநிலத்தில் மொத்தம் 313 நிரந்தரத் தியேட்டர்களும், 175 'டூரிங்' சினிமாக்களும் இருக்கின்றன. ஆந்திராவில் 225 நிரந்தரத் தியேட்டர்களும், 60 'டூரிங்' சினிமாக்களும் இருக்கின்றன இரண்டு மாநிலங்களிலுமுள்ள 5 கோடி மக்களுக்கு 773 சினிமா தியேட்டர்கள் போதாது; எனவே, படத் தயாரிப்பை அனுசரித்து சினிமா தியேட்டர்களையும் நிறைய அதிகரிக்க வேண்டியது அவசியமாகும்."

என்று, 1955-ம் ஆண்டின் பிலிம் தொழில பற்றி விமரிசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை மாநிலத்தில் மொத்தமாக 23 'ஸ்டுடியோ'க்கள் உள்ளன; அவற்றில 14 'ஸ்டுடியோ'க்கள் சென்னை நகரில உள்ளன

66 படத் தயாரிப்பாளர்கள் 94 படங்கள் எடுத்துள்ளனர்

'பிலிம' தொழிலில ஏற்கனவே 24 தயாரிப்பாளர் இருந்துவருகிறார்கள்; புதிதாக 32 தயாரிப்பாளர்கள் படத் தயாரிப்பில் இறங்கினர்.

1955-ல், 15 இலட்சம் அடி படங்கள் தணிக்கை செய்யப்பட்டன; 1954-ல 14 இலட்சம் அடி படங்கள் தணிக்கை செய்யப்பட்டன.

சராசரி தென்னிந்தியப் படத்தின் நீளம 15 600 அடி. தமிழ்ப் படத்தின சராசரி நீளம 15.800 அடி; தெலுங்குப் படத்தின நீளம 16 300 அடி.

மொத்தம் 25,000 அடிகள் தணிக்கை அதிகாரிகளால் வெட்டித் தள்ளப்பட்டன.

ஒரே ஒரு படத்தில் மட்டும அதிகபட்சம 3284 அடிகள் வெட்டப்பட்டுள்ளன.

1955-ம ஆண்டில், தென் இந்திய ஸ்டுடியோக்களில மொத்தம 101 படங்கள் தயாராகியுள்ளன; மற்றெல்லா வருடங்களைக் காட்டிலும், 1955-ல் பட உற்பத்தி உச்சகட்டத்தை அடைந்துள்ளது. 46 தமிழ்ப் படங்களும், 24 தெலுங்கு படங்களும் 1955-ல் தயாராகியுள்ளன.

பிரெஞ்சு அரசியல் வானில் ஒரு புதிய தோற்றம்!

முதல் தேர்தலிலேயே அற்புத வெற்றிபெற்ற புவுஜாடிஸ்ட் கட்சி!

பிரான்சில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஒரு புதுமை நிகழ்ந்திருக்கிறது; அரசியல்வானில் அது ஒரு புதிய அரசியல் கட்சி என்றே கருதப்படுகிறது

அக்கட்சியின் தலைவர் 34 வயதுடைய—பேஜ. பென்சில் விற்கும் ஒரு கிராமக் கடைக்காரர் ஆவார்; அவர் பெயர் பியேரி புவு ஜாடே என்பதாகும்; அவருடைய பெயரினாலேயே, அவருடைய கட்சி அழைக்கப்படுகிறது.

அக்கட்சி, சிறிய கடைக்காரர்கள், கைத் தொழிலாளர்கள் நலன்களைப் பாதுகாக்கும் நோக்குடையதாகும். வரி எதிர்ப்பும், பழைய அரசியல் சட்டத்தை விரட்டுவதும் அதன் தேர்தல முழக்கமாகும்

அக்கட்சி எதிர்த்ததின் காரணமாக, வரி சீர்திருத்தம் செய்ய முயற்சித்த பிரெஞ்சு அரசாங்கம் 1955 மார்ச்சில கவிழ்ந்து விட்டது

அக்கட்சியைச் சேர்ந்த பத்து பேர்கள் கூட, பார்லிமெண்ட் தேர்தலில் வெற்றிபெறமாட்டார்கள் என நிபுணர்கள் கருதினர்; ஆனால், நாற்பத்தொன்பது நபர்கள் தேர்தலில் வெற்றிபெற்றிருக்கிறார்கள். அக்கட்சியின் பெயரில் நின்ற மொத்தத்தில பாதி நபர்கள் வெற்றிபெற்று விட்டிருக்கிறார்கள்.

ஆறு இலட்சம் மைல்கள் சுற்றி அக்கட்சியின் தலைவர் தேர்தல் பிரசாரம் செய்திருக்கிறார். தினசரி மூன்று கூட்டங்களுக்குக் குறையாமல் பேசி, அவர் தனது கட்சிக்கு ஆதரவு திரட்டி இருக்கிறார்

எல்லாவற்றைக் காட்டிலும் குறிப்பிடத்தக்கது, கட்சித் தலைவரான பியேரி, தானே ஒரு அபேட்சகராகத் தேர்தலில் கலந்துகொள்ளாததேயாகும்.

கைத்தறி வாங்குவோருக்கு கழிவுத் தொகை

நியாய விலைக் கடைகளில் கிடைக்காது

பொங்கலுக்குக் கழிவுத் தொகையைக் கூடுதலாக்கமாட்டார்களாம்

நியாய விலைக் கடைகள் மூலமாக விற்பனையாகும் கைத்தறி ஆடைகளுக்குக் கழிவுத் தொகை வழங்குவதை நிறுத்திவிட இந்தியப் பேரரசு முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது

கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விற்பனையாகும் கைத்தறித் துணிகளுக்குத் தொடர்ந்து கழிவுத் தொகை வழங்கப்படும் என்றும் தெரியவருகிறது.

கூட்டுறவுச் சங்கங்கள் ரூபாய்க்கு ஒன்றரை அணாவும், நியாய விலைக் கடைகள ரூபாய்க்கு ஓரணாவும் கழிவுத் தொகையாகப் பெற்றுவருகின்றன

பொங்கல் காலத்தில், கழிவுத் தொகையை ஒன்றரை அணாவிலிருந்து இரண்டணாவாக உயர்த்தவும் வேண்டாம் என்றும் சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்களாம்.

கழகச் செய்திகள்!

இடையகோட்டை தி. மு. கழகம்

இடையகோட்டை தி. மு கழக கிளையின் அவசரப் பொது உறுப்பினர் கூட்டம் 31-12-55ல், தோழர் கா. கு இராமசாமி தலைமையில் நடைபெற்றபோது, 24-12-55ல் காங்கிரஸ்—தி. மு கழகக் கூட்டு முயற்சியால் நடைபெற்ற புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்த வட்டாரப் பொது மக்களுக்கு நன்றி தெரிவிப்புப் பொதுக்கூட்டத்தில் பேசிய கழகத் தோழர் மு. பன்னீர்ச்செல்வன் அவர்கள், தன்னைத் தாக்கிப்பேசியதாக தொகுதி எம் எல் ஏ., இனைஞர் காங்கிரசுடன் சேர்ந்து கொண்டு செய்த புகார் பற்றி விவாதிக்கப்பட்டது. விவாத முடிவில் தோழர் மு பன்னீர்ச்செல்வன் பேசிய பேச்சு எம். எல் ஏ-வையோ, அவரைச் சார்ந்தவரையோ தாக்குவதாகத் தெரியவில்லை என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

மேற்கண்ட பிரச்சினையை சமூகமாகத் தீர்க்கச் சென்ற நமது தோழர்களிடம் ஜாதி துவேசத்தைக் கிளப்பும் வகையில் இனையை ஒழித்துக்கட்டும் நோக்கத்துடனும் பேசி, தான் இரண்டாவது ஆண்டு விழாவிற்கு நன்கொடையாகத் தந்த 15 ரூபாயையும் எம். எல். ஏ. திரும்பக் கேட்டதால், திருப்பிக் கொடுத்துவிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

தளவாய்புரம் தி. மு. க.

30—12—55 இரவு 9 மணிக்கு கழகக் கட்டிடத்தில் தோழர் க. சங்கரநாராயணன் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், புயல்-புனலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்தும், ஜனவரி இரண்டாவது வாரத்தில் இராமநாதபுரம் மாவட்டச் சுற்றுப்பயணம் செய்யும் அண்ணா கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து, மாநில மாநாட்டுக்கு அண்ணாவிடம் ரூ 100 அளிப்பதென்றும், திருவில்லிபுத்தூரில் அமைந்துள்ள வட்டக் கழகத்தை ஆதரித்துப் பங்கெடுத்துக் கொள்வதெனவும், தைப் பொங்கல் விழாவைக் கொண்டாடுவதெனவும் முடிவுகள் செய்யப்பட்டன.

'30—ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருக்காதே'

சோஷலிஸ்டுக் கட்சித் தீவிர உறுப்பினர்களுக்கு உத்தரவு

செகந்திராபாத், ஜன. 4—

சோஷலிஸ்டுக் கட்சியில் தீவிர உறுப்பினர்களா யிருப்பவர்களுக்கு முப்பது ஏக்கராவுக்கு அதிகமாக நிலம் இருந்தால், அந்த உபரி நிலத்தைத் தமது சாகுபடியாளர்களிடமோ, நிலமற்ற விவசாயிகளிடமோ பிரித்துக் கொடுத்துவிட வேண்டுமென்று சோஷலிஸ்டுக் கட்சி மாநாட்டில் தீர்மானம் ஒன்று நிறைவேறியுள்ளது.

நிலக்கோட்டையில் பொதுச்செயலாளர்

கழகத் தோழர்களுக்கு வரவேற்பு

15—12—55 காலை 10 மணிக்கு இங்கு வந்த தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர்கள் சி. பி. சிற்றரசு, அ. பொன்னம்பலனார், என். எஸ். இளங்கோ, எஸ். முத்து ஆகியவர்களுக்கு தோழர் இ. சாத்தான் அவர்கள் கைத்தறி ஆடைகள்—மாலைகள் அணிவித்து, கடைத் தெருவில் கழகக் கொடியை ஏற்றுவிக்கும்படி கேட்டுக்கொண்டார். பொதுச்செயலாளர் அவர்கள் தி. மு. கழகக் கொடியை ஏற்றுவித்தார். அன்று மாலை 3 மணிக்கு மதுரை மாவட்ட தி மு கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

கடையநல்லூர் நகர தி. மு. கழகம்

31—12—55 இரவு 8 மணியளவில் தோழர் சி. நடராசன் தலைமையில் கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெற்றபோது, ஜனவரி இறுதி வாரத்தில் மாவடிக்காலில் ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதென்றும், உறுப்பினர்கள் சேர்ப்பதை துரிதப்படுத்த வேண்டுமென்றும், கடைவீதியில் முக்கிய மூன்று சந்துக்களில் மக்கள் வசதிக்காக சிறுநீர் கழிக்கும் இடங்கள் அமைத்துத் தர நகராண்மைக் கழகத்தை வற்புறுத்திடும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

22—12—55 இரவு 8 மணியளவில், செயலாளர் சி. நடராசன் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், 17—1—56 அன்று பொங்கல் விழாவை நடத்துவதென்றும், அத்துடன் 'சமுதாயப் புரட்சி' என்ற நாடகத்தையும் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சீராமபுரம் — பெங்களூர் தி. மு. கழகம்

1—1—56 மாலை 3 மணிக்கு, சீராமபுரம் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் கூ. கண்ணன் தலைமையில் நடைபெற்றபோது, கழகத்தின் சார்பில் ஜனவரி 14, 15-ம் தேதிகளில் கொடி ஏற்றுதல், நாடகம், பந்தயங்கள், பொதுக்கூட்டம் ஆகியவைகளோடு பொங்கல் விழாவைக் கொண்டாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

மேலச்சண்முகபுரம் (தூத்துக்குடி) தி. மு. க.

1—1—56 காலை 10 மணிக்கு தோழர் ப. குருசாமி தலைமையில் கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது, தமிழர் திருநாள் தைப் பொங்கல் விழாவை சிறப்பாகக்கொண்டாடுவதென்றும், தூத்துக்குடி சதி வழக்கில் சிறை தண்டனை அனுபவித்துவரும் தோழர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு சர்க்காரைக் கோரியும், புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கழகச் சார்பில் நிதி வசூலித்து அனுப்புவதென்றும் முடிவு செய்யப்பட்டன.

க. புதுப்பட்டி தி. மு. க.

2—1—56 மாலை 8 மணிக்கு, கழகச் செயற்குழு அவசரக் கூட்டம் தோழர் கே. எஸ். இராமசாமி தலைமையில் நடைபெற்றபோது, 16—1—56ல் பொங்கல் விழாப் பொதுக்கூட்டத்திற்கு நிதி வசூலிக்கக் குழு ஒன்று அமைத்தும், வெள்ள நிவாரண நிதிக்கு நிதி வசூலித்து அனுப்புவதெனவும், தோழர் எம். இரத்தினம் அவர்களை துணைச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தும் முடிவுகள் செய்யப்பட்டன.

தேவிகுளம், பீர்மேடு:

‘கேரளத்தவர் பூச்சாண்டிகளுக்கு மத்திய சர்க்கார் வசப்படப்போகிறதா?’

‘தமிழகத்தில் இணையவில்லையானல் அவை சவக்காடாகும்’

திரு-தமிழகத் தலைவர் ரசாக் முழக்கம்

“தேவிகுளம்—பீர்மேட்டில் தமிழர்களின் பிரச்சினையைப் பொறுத்தவரையில் அவர்களது வாழ்க்கை—வாழ்க்கையின் இறுதிப் பிரச்சினையாகவே இருந்துவருகிறது. அதற்காகவே அந்தப் பகுதிகள், நால்வர் குழு முடிவுக்கு விடப்பட்டிருக்கிறது.

“இப்பிரச்சினையைப் பொறுத்தவரையில், நால்வர் குழு இதுவரையிலும் மதில்மேல் பூனையாகவே இருந்துவருகிறது. கேரளப் பிரதிநிதிகளின் உருட்டலுக்கும், மிரட்டலுக்கும் நால்வர் குழு வசப்பட்டுவிடுமானல் அதைவிட வெட்கக் கேடான விடயம் வேறு எதுவும் இருக்க முடியாது.

“தமிழ் நாட்டுப் பிரதிநிதிகளாகிய நாங்கள் எல்லோருமே உணர்ச்சிவசப்படாமல், வார்த்தைகளை அளந்து நிதானமாகவே டில்லியில் உபயோகித்தோம். ஆனல், டில்லிக்குக் ‘காவடி’ எடுத்துவந்த பட்டம் தாணுப்பிள்ளையும், அவர் கூட்டாளிகளும் டில்லியில் நடந்துகொண்ட விதத்தைக் கவனிக்க வேண்டும். ‘தமிழர்களைப் பிரிந்து போகுமாறு செய்துவிட்டால் கேரள மாநிலத்தில் கம்யூனிஸ்டுகளின் கை மேலோங்கிவிடும்’ என்று அவர்கள் பூச்சாண்டி காட்டினர்; இந்தப் பகல்வேடத்தைக் கண்டுபிடிப்பதற்கு டில்லி வட்டாரங்களுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை,”

—என்று, மாநிலங்கள் சபை உறுப்பினரான ஏ. ஏ. ரசாக் அவர்கள், நாகர்கோயிலில் கூறியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

“பனம்பள்ளி—உதயபானு கோஷ்டியினர் டில்லிக்கு வந்தபோது, பட்டம் தாணு கோஷ்டியின் பல்லவியையே வேறொரு ‘சுர’த்தில் பாடினர்கள்; ‘தமிழ்ப் பிரதேசங்கள் பிரிந்துபோய்விட்டால் கேரளத்தின் பொருளாதார நிலை சீர்குலைந்துபோகும்’ என்பதே பனம்பள்ளி கோஷ்டியின் பிரச்சாரமாகும்.

“மூன்ருவது பூச்சாண்டி கோஷ்டி, முன்னள் மந்திரி கேசவன் தலைமையில் டில்லிக்கு வந்தது; ‘தேவிகுளம்-பீர்மேடு தாலுகாக்கள் சென்னையோடு இணையுமானல் மலையாளிகள் அடங்கியிருக்கமாட்டார்கள்; கடைசி துளி இரத்தம் இருக்கும்வரையிலும் போராடியே தீருவார்கள்; நானே அதற்கு தலைமை தாங்கி நடத்துவேன்,’ என்று கேசவன் கூறினர். அவருடைய பூச்சாண்டியையே டில்லிக்கு வந்த ஸ்ரீகண்டன் நாயர் தமது கடைசிப் பூச்சாண்டியாக வெளியிட்டார்.

“இவ்வளவுதூரம் ஆத்திரமூட்டக்கூடிய வகையில் கேரளப் பிரதிநிதிகள் நடந்துகொண்ட போதிலும், தமிழ்ப் பிரதிநிதிகள் உணர்ச்சிப் பெருவெள்ளத்தில் மிதந்து செல்ல இஷ்டப்படவில்லை; ஏனெனில் ‘கடினமான பதப் பிரயோகத்தால் பல்லுடையாது’ என்பது, தமிழ்ப் பிரதிநிதிகளுக்குத் தெரியும் அதே நேரத்தில் இத்தகைய அதட்டல்களில் பிரண்டு போவதற்கு மத்திய சர்க்கார் அவ்வளவு பலவீனமுடையதாக இருக்கவில்லை என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

“ஆனல் தமிழ்ப் பிரதிநிதிகள் ஒன்றை மட்டும் தெளிவுபடுத்திவிட்டனர். கேசவனும், அவர் கூட்டாளிகளும் துளித் துளியாகத் தங்கள் இரத்தத்தைச் சிந்துவதற்குத் திடமாக முடிவு செய்துவிட்டார்கள் என்பது நிச்சயமானல், தயங்காமல் அதை நடத்துவதற்குள்ள வாய்ப்பை அவர்களுக்குக் கொடுப்பதே நல்லது; ஏனெனில், தேவிகுளம்—பீர்மேடு கேரளத்தில் தள்ளப்பட்டுவிடுமானல், அங்குள்ள தமிழர்கள் தங்கள் உயிரையே பலி கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு, செல்வம் கொழிக்கும் அந்த வளப் பிரதேசம் அமைதி நிறைந்த ஒரு சவக்காடாக மாறிவிடும்; எனவே, இந்த இரண்டு மார்க்கங்களில் எதை இந்திய சர்க்கார் கைக்கொள்கிறது என்பது இன்னும் சில நாட்களில் தெரிந்துவிடும்.”

அதைத் தொடர்ந்து சிலகேள்விகளுக்கும் திரு. ரசாக் அவர்கள் பதிலளித்துள்ளார்:—

கே: தேவிகுளம்—பீர்மேடு பிரச்சினையில் நால்வர் குழுவின் தீர்ப்பு தமிழர்களுக்கு விரோதமாக இருக்குமானல், சென்னை சர்க்காரும், தி. த. நா. கா-வும் என்ன முடிவை மேற்கொள்ள வேண்டிவரும்?

ப: தேவிகுளம்—பீர்மேட்டை தமிழ் நாடு இழந்துவிட முடியாது. தோழர் நேசமணி கூறியதுபோல், அது தமிழ் மக்களின் உயிர்ப் பிரச்சினையாகும். எனவே, சென்னை சர்க்காரானலும் சரி—தமிழக மக்களானலும் சரி, அந்த விஷயத்தில் பராமுகமாக இருந்துவிட முடியாது என்பது நிச்சயம்.

கே: நால்வர் குழு தமிழர்களுக்கு விரோதமாயிருக்குமானல், சென்னை முதலமைச்சர் காமராசர் கடைசிவரை போராடுவாரா? அல்லது மத்திய சர்க்கார் சொற்படியே கேட்பாரா?

ப: காமராசர் தமிழர்கள் தலைவராக இருந்தால் தமிழர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றப் பாடுபடுவார்; மத்திய சர்க்காரின் வெறும் ஒரு ஊழியராக இருந்தால் மத்திய சர்க்காரின் கட்டளையைத்தான் கடைபிடிப்பார்.

★

திரு-தமிழ் வட்டங்கள்

கேரளத்துடன் இருக்கச் செய்ய தமிழரின் முயற்சியாம்!

திருவனந்தபுரம், ஜன. 4—

தென் திருவாங்கூரில் உள்ள தமிழ் தாலுகாக்கள் கேரளத்திலேயே தொடர்ந்து இருக்க வேண்டும் என்று வற்புறுத்துவதற்காக, முன்னள் ம. சோ. கட்சி மந்திரிசபையிலிருந்த பி. எஸ் நடராஜ(பிள்ளை) என்பார், திரு-தமிழகக் காங்கிரஸ் தலைவர்களைச் சந்திக்கப் போவதாக அறிவித்திருக்கிறாராம்.

தமிழர்கள் தொடர்ந்து கேரளத்திலிருப்பதானல் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்புகளைத் தருவதாக மூதன் மந்திரி கோவிந்த மேனன் அறிவித்ததைத் தொடர்ந்தே தோழர் நடராஜ பிள்ளை இந்த ‘வேலை’யை மேற்கொண்டிருக்கிறாராம்!

★

‘தமிழர் நலனுக்குத் துரோகமாகும்’

நடராஜப் பிள்ளை மீது குற்றசாட்டு

சென்னை, ஜன. 4—

“சிபாரிசு செய்யப்பட்டுள்ள நான்கு தமிழ் வட்டங்களையுங்கூட, கேரளத்திலேயே இணைந்திருக்கச் செய்ய வேண்டுமென்பதற்காக திரு-கொச்சி சட்டசபையில் தமிழ் உறுப்பினர் என்று கூறப்படும் நடராச பிள்ளை என்பார் மேற்கொண்டுள்ள முயற்சி கேட்டு திடுக்கிட்டேன்;

“தென் திருவாங்கூர் தமிழ் வட்டங்களில் எந்த ஒரு பகுதியின் பிரதிநிதியாகவும் இல்லாத அவர், திரு-தமிழர்களுக்காகப் பேச முனைந்திருக்கிறார்.

“இவர் தன்னிஷ்டப்படி, நிறம் மாறிக்கொள்ளலாம்; ஆனல், திருவாங்கூர் தமிழர்கள், அத்தகு முயற்சியை முறியடிக்கத் தவறமாட்டார்கள்.

“நடராச பிள்ளை, தமிழர்களின் நலன்களுக்குத் துரோகமிழைக்க முற்பட்டிருக்கிறார்; எனவே, உடனடியாகத் திரு-தமிழகக் காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள், சர்க்காருக்குத் தரும் ஆதரவைத் திரும்பப் பெறுவதின் மூலம் தமிழர்களின் ஒற்றுமைக்கு வழிகோல வேண்டும்”

என்று, தோழர் எஸ். செல்லச்சாமி அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

பம்பாயின் எதிர்காலம்: பேச்சுவார்த்தைகள் தோல்வி

சம்யுக்த மராட்டியக் கோரிக்கை வற்புறுத்தப்படுகிறது

பம்பாய், ஜன. 4—

‘பம்பாயைத் தலைநகராகக் கொண்ட சம்யுக்த மராட்டியம் என்ற மாநில அமைப்பைத் தவிர வேறெந்த ஏற்பாடுகளையும் மராட்டியர்கள் இப்போது கண்ணெடுத்தும் பார்ப்பதற்கில்லை என்று சங்கர் ராவ் தேவ் தெரிவித்திருக்கிறார்.

அவர், பம்பாய் முதன் மந்திரி மொரார்ஜி தேசாய், மற்றும் மராட்டிய காங்கிரஸ் தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்து, பம்பாய் பற்றி ஒரு முடிவு மேற்கொள்ளுவதற்காகப் பேச்சு வார்த்தைகள் நடத்தினர்.

பம்பாய், குஜராத், விதர்ப்பம் உள்ளிட்ட மராட்டியம் ஆகியவற்றை இணைத்த இரு மொழி மாநிலம் அமைப்பது என்ற மராட்டிய காங்கிரஸ் தந்த மாற்றுத் திட்டத்தைக்கூட இப்போது மராட்டியர் ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று அறிவித்து விட்டிருக்கின்றனர்.

இப்போது நிலவும் சூழ்நிலையில், தன்னல், எல்லோரும் ஒப்பக்கூடிய ஒரு பரிகாரம் தேடுவது இயலாது போய்விட்டது என்று மத்திய சர்க்கார் உள்நாட்டு மந்திரி பண்டித பந்த், மற்றும் மொரார்ஜி தேசாய் ஆகியோருக்கு சங்கர் ராவ் தேவ் தகவல் தந்துவிட்டிருப்பதுடன், பேச்சு வார்த்தைகள் தோல்வி கண்டது குறித்து பத்திரிகைகளுக்கும் அறிக்கை தந்திருக்கிறார்.

தென்றல் இலக்கியப் போட்டி பாராட்டு விழா

8—1—56-ல் தேதியன்று காரைக்குடியில் தோழர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெற இருந்த பாராட்டு விழா. தோழர் கருணாநிதி அவர்களின் உடல் நலக்குறைவாலும், வேறு சில இடையூறுகளாலும் கால வரையறையின்றி ஒத்திவைக்கப் பட்டது.

பரிசு பெற்ற எட்டுப் பேர்களுக்குப் பரிசுத் தோகை அனுப்பப் பட்டுவிட்டது,

கழகக் கூட்டங்கள்

★

மணப்பாறை

7—1—56 அன்று, நேரு சதுக்கத்தில், தோழர் மா. இளங்கிரன் தலைமையில் நடைபெறும் தோழர்கள் சிறறுளி-சு. பிரமணியம், எம். எஸ் மணி, என் வடிவேலன், பி. மதிவாணன் ஆகியோர் பேசுவர்.

★

இலங்கை

8—1—56 பிற்பகல் 2-30 மணிக்கு, இலங்கை—கொள்ளுப்பிட்டி கிளை தி. மு கழக மூன்ருவது ஆண்டு நிறைவு விழா, சின்னப் பொரலை செம்பல் பிலேஸ் பௌத்தர் பெண்கள் பாடசாலை மண்டபத்தில் அமைந்துள்ள சித்தார்த்தன் அரங்கில், தோழர் சு கு. மாயக்கிருட்டிணன் தலைமையில் நடைபெறும் தோழர் சு கா. சுந்தரராசன் துவக்கவுரையாற்றுவார் தோழர் இரா. அதி. மணி, மற்றும் பலர் பேசுவர்.

ஆலந்தூர் தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு

★

7—1—56 இரவு 9 மணிக்கு, ஆலந்தூர் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம், கழக அலுவலகத்தில் நடைபெறும். அதுபோது, பல முக்கியப் பொருள்கள் பற்றி முடிவு செய்யப்படும்.

‘சீட்டோ நாடுகளின் உதவி அதிகமாக வேண்டும்’

பாகிஸ்தான் கோரிக்கை எழுப்புமாம்

கராச்சி, ஜன. 4—

வரும் மார்ச் திங்களில, இங்கு தென் கிழக்கு ஆசிய ஒப்பந்த நிறுவனக் ‘கவுன்சில்’ கூட்டம் (சீட்டோ) நடைபெறும்போது, அதில் உறுப்பினரான பாகிஸ்தான், ‘கவுன்சில்’ தனக்கு அதிகமான உதவி செய்ய வேண்டும் எனக் கோருமாம்.

கடந்த நவம்பரில் நடைபெற்ற பாக்தாத் ஒப்பந்தக் கவுன்சில் கூட்டத்திலும் பாகிஸ்தான், இதே போலக் கோரிகையை எழுப்பியிருக்கிறதாம்.

பாகிஸ்தான் எந்த அளவு உதவி கோருகிறது என்பது தெரியவில்லையாம்

இந்த இராணுவக் குழுவின் முதல இரண்டு கூட்டங்கள் 1954-ல் மணிலாவிலும், 1955-ல் பாங்காங்கிலும நடைபெற்றன.

இப்போது கராச்சியில் நடைபெறவிருக்கும் மூன்ருவது கூட்டத்தை பாக். பிரதமர் முகம்மது அலி துவக்கிவைப்பார் என்றும், அமெரிக்காவின் பிரதிநிதிகளுக்கு டல்லஸ் தலைமை வகிப்பார் என்றும் தெரியவருகிறது.

தி. மா. மு. கழக அமைப்புக் குழு

திராவிட மாணவர் முன்னேற்றக கழக முதல் அமைப்புக் குழுக் கூட்டம், சிதம்பரம் அல்லது அண்ணமலை நகரில், 28-1-56 மாலை 3 மணிக்கு நடைபெறும். தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தோழர் கே. ஏ. மதியழகன அவர்களும் சிறப்பு அழைப்பின்பேரில் கலந்து கொள்ளுகின்றார்கள்.

டி. கே. பொன்னுவேலு,
அமைப்பாளர், தி மா மு க
‘அறிவகம்,’ சென்னை-13
4—1—56

வடநாட்டவரின்சணல் சூதாட்டப் பேரம்

‘லைசென்ஸ்’ இல்லாமல் 301 டெலிபோன்கள் உபயோகம்

102 பேர் கைதுசெய்யப்பட்டனர்

கல்கத்தா, ஜன. 4—

சணல் சூதாட்டப் பேரங்கள் நடத்தியதாகக் கல்கத்தாவில் சில தினங்களுக்குள்ளாக 102 பேர் போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

68 காரியாலயங்களைப் போலீசார் சோதனையிட்டு, லைசென்ஸ் இல்லாமல் உபயோகிக்கப்பட்ட 301 டெலிபோன்களையும், 423 ‘பாட்டரி செட்’களையும், ஏராளமான பிளாஸ்டிக் மின்சாரக் கம்பிகளையும் கைப்பற்றியுள்ளனராம். தொடர்ந்து சோதனைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறதாம்.

புதுடில்லியில் ‘மஞ்சள் காமாலை’ நோய்

காரணம் கண்டு பிடித்த நிபுணர்கள் அறிவிப்பு

புதுடில்லி, ஜன 4—

‘மஞ்சள் காமாலை’ என்ற நோய் புதுடில்லியில் கடுமையாகப் பரவியிருக்கிறதாம்.

இதற்கான காரணத்தைக் கண்டுபிடிப்பதற்கு நிபுணர்கள் சிலர் இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்டனர்.

கடந்த நவம்பரில் நகரத் தண்ணீர் வினியோகத்தில் ஏற்பட்ட அசுத்தம்தான் இந்நோய் கடுமையாக இருப்பதற்குக் காரணமென அந்த நிபுணர்கள் முடிவு செய்தனராம்.

இந்த நோய் இராணுவப் பகுதிகளிலும் பரவாமலிருப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவாம்.

நூல் நிலையங்களின் அபிவிருத்திக்காக, இந்திய சர்க்கார் நடப்பு ஆண்டில் மாநில சர்க்கார்களுக்கு மொத்தம் ரூ 35,37,473 வழங்கியிருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ